செய்தி வெளியீடு எண்: 306 நாள்: 05.05.2018

## செய்தி வெளியீடு

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு.எடப்பாடி கே. பழனிசாமி அவர்கள் 4.5.2018 அன்று தலைமைச் செயலகத்தில், தொழில் வணிகத் துறையின் சார்பில் கோயம்புத்தூர் மாவட்டம், ஒண்டிபுதூரில் 25 லட்சம் ரூபாய் மதிப்பீட்டிலான தாய்கோ வங்கியின் புதிய கிளையினை திறந்து வைத்து, குறு, சிறு மற்றும் நடுத்தரத் தொழில் நிறுவனங்களுக்கான ஒற்றை சாளர தகவு, மேம்படுத்தப்பட்ட வேலையில்லா இளைஞர்களுக்கான வேலைவாய்ப்பு உருவாக்கும் திட்ட தகவு, மேம்படுத்தப்பட்ட புதிய தொழில் முனைவோர் மற்றும் தொழில் நிறுவன மேம்பாட்டுத் திட்ட தகவு, தொழில் வணிக ஆணையரகத்தின் சமூக ஊடக வலைதளப் பக்கங்கள் ஆகியவற்றை துவக்கி வைத்தார்கள்.

குறைந்த முதலீட்டில் அதிக நபர்களுக்கு வேலைவாய்ப்புகள் வழங்குவதன் மூலம் கிராமங்கள், சிறு நகரங்கள் மற்றும் தொலைதூரப் பகுதிகளில் தொழில் வளர்ச்சியை ஊக்குவிப்பதிலும், பெரும் தொழிற்சாலைகளுக்கு அத்தியாவசியமாய் விளங்குகின்ற உப பொருட்களை தயாரித்து வழங்குவதன் மூலம் நாட்டின் ஒட்டு மொத்த தொழில் வளர்ச்சியிலும், பொருளாதார முன்னேற்றத்திலும் குறு, சிறு மற்றும் நடுத்தரத் தொழில் நிறுவனங்களின் பங்கு ஈடு இணையற்றதாகும். இத்தகைய சிறப்புமிகு குறு, சிறு மற்றும் நடுத்தர தொழில் வளர்ச்சியை ஊக்குவிக்கும் வகையில் மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்களின் வழியில் செயல்படும் தமிழ்நாடு அரசு பல்வேறு திட்டங்களை சீரிய முறையில் செயல்படுத்தி வருகிறது.

அந்த வகையில், தொழில் வணிக துறையின் சார்பில் கோயம்புத்தூர் மாவட்டம், ஒண்டிபுதூரில், 25 லட்சம் ரூபாய் மதிப்பீட்டிலான தாய்கோ வங்கியின் 46–வது கிளையினை மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு.எடப்பாடி கே. பழனிசாமி அவர்கள் திறந்து வைத்தார்கள்.

தமிழ்நாட்டில் தொழில் தொடங்குவதற்கான அனுமதிகள் வழங்கப்படுவதை எளிமையாக்குவதற்கு தொழில் துறை மூலம் ஒருங்கிணைந்த இணையதள வழி ஒற்றைச்

சாளர தகவு (Single Window Portal) உருவாக்கப்பட்டு செயல்படுத்தப்பட்டு வருகிறது. இந்த தகவினை குறு, சிறு மற்றும் நடுத்தர தொழில் நிறுவனங்களுக்கு ஏற்ற வகையில் தேவையான மாற்றங்கள் செய்து, கூடுதலாக சுகாதாரத் துறையிடமிருந்து பெறவேண்டிய தடையில்லாச் சான்றிதழ், ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறையினரிடமிருந்து பெற வேண்டிய உரிமம் மற்றும் மின் வாரியத்திடமிருந்து பெற வேண்டிய குறைந்த அழுத்த மின்இணைப்பு ஆகியவற்றிற்கான சேவைகளை உள்ளடக்கி 9 லட்சத்து 93 ஆயிரம் ரூபாய் செலவில் உருவாக்கப்பட்டுள்ள குறு, சிறு மற்றும் நடுத்தர தொழில் நிறுவனங்களுக்கான ஒற்றை சாளர தகவினை **(https://easybusiness.tn.gov.in/msme)** மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு.எடப்பாடி கே. பழனிசாமி அவர்கள் துவக்கி வைத்தார்கள். இதன்மூலம், தொழில் முனைவோர்கள் பல்வேறு துறைகளிடமிருந்து பெற வேண்டிய உரிமங்கள், தடையில்லாச் சான்றுகள், ஒப்புதல்கள் போன்றவைகளை அந்தந்த அலுவலகங்களுக்கு நேரில் செல்லாமல் இணையதளம் மூலம் விண்ணப்பித்து பயன்பெறலாம்.

தமிழ்நாடு அரசு, படித்த வேலையில்லா இளைஞர்களுக்கு வேலைவாய்ப்பு உருவாக்கும் திட்டத்தை (UYEGP) செயல்படுத்தி வருகிறது. இத்திட்டத்தின் மூலம் படித்த வேலையில்லா இளைஞர்கள், உற்பத்தி, சேவை மற்றும் வியாபார நிறுவனங்கள் தொடங்கிட முறையே அதிகபட்சமாக 10 லட்சம் ரூபாய், 3 லட்சம் ரூபாய் மற்றும் 1 லட்சம் ரூபாய் வரையிலான திட்ட மதிப்பீட்டில் 25 விழுக்காடு அரசு மானியத்துடன் கூடிய கடன்உதவிகளை வங்கிகள் மூலமாக வழங்கி வருகிறது. இத்திட்டத்தின் கீழ், படித்த வேலையில்லா இளைஞர்கள் தொழில் தொடங்குவதற்கு கடனுதவி பெற்றிட ஏதுவாக இணையதளம் மூலமாக விண்ணப்பித்திட மேம்படுத்தப்பட்ட தகவினை **(http://www.msmeonline.tn.gov.in/uyegp)** மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு.எடப்பாடி கே. பழனிசாமி அவர்கள் துவக்கி வைத்தார்கள்.

படித்த முதல் தலைமுறை இளைஞர்களுக்கு உதவி செய்யும் நோக்கத்துடன் புதிய தொழில் முனைவோர் மற்றும் தொழில் நிறுவன மேம்பாட்டுத் திட்டம் (NEEDS) என்ற திட்டத்தை தமிழ்நாடு அரசு செயல்படுத்தி வருகிறது. இத்திட்டத்தின் மூலம், தொழில் முனைவோர்களுக்கு உற்பத்தி மற்றும் சேவை தொழில்களை தொடங்கிட, திட்ட மதிப்பீட்டுத் தொகையில் 25 விழுக்காடு முதலீட்டு மானியம் (அதிகபட்சம்

25 லட்சம் ரூபாய்) வழங்குவதுடன், வங்கிக் கடனுக்கான வட்டியில் 3 விழுக்காடு பின்முனை மானியமும் அரசு வழங்கி வருகிறது. இத்திட்டத்தின் கீழ், படித்த முதல் தலைமுறை இளைஞர்கள் தொழில் தொடங்குவதற்கு கடனுதவி பெற்றிட ஏதுவாக இணையதளம் மூலமாக விண்ணப்பித்திட மேம்படுத்தப்பட்ட தகவினை (http://www.msmeonline.tn.gov.in/needs) மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு.எடப்பாடி கே. பழனிசாமி அவர்கள் துவக்கி வைத்தார்கள். இதன்மூலம், பயனாளிகள் தங்களது விண்ணப்பம் மற்றும் ஆவணங்களை இணையதளத்தின் வாயிலாக, பதிவேற்றம் செய்து கொள்ளலாம்.

தொழில் வணிகத் துறையின் திட்டங்கள் குறித்து தொழில் முனைவோர்களுக்கு விழிப்புணர்வு ஏற்படுத்தும் வகையில் புதிதாக உருவாக்கப்பட்டுள்ள, சமூக ஊடக வலைதளப் பக்கங்களான பேஸ்புக், டிவிட்டர் மற்றும் யூடியூப் ஆகியவற்றின் சேவைகளை மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு.எடப்பாடி கே. பழனிசாமி அவர்கள் துவக்கி வைத்தார்கள். இதன்மூலம், தொழில் முனைவோர்களின் கருத்துக்கள் மற்றும் குறைகளை கேட்டறிந்து துறை அமல்படுத்தும் திட்டங்களை மாற்றியமைக்கவும் மேம்படுத்திடவும் இயலும்.

இந்த நிகழ்ச்சியில், மாண்புமிகு ஊரகத் தொழில் துறை அமைச்சர் திரு.பா. பென்ஜமின், தலைமைச் செயலாளர் முனைவர் கிரிஜா வைத்தியநாதன், இ.ஆ.ப., குறு, சிறு மற்றும் நடுத்தரத் தொழில் நிறுவனங்கள் துறைச் செயலாளர் திரு. தர்மேந்திர பிரதாப் யாதவ், இ.ஆ.ப., தொழில் ஆணையர் மற்றும் தொழில் வணிக இயக்குநர் / முதன்மைச் செயலாளர் டாக்டர் ராஜேந்திர குமார், இ.ஆ.ப., மற்றும் அரசு உயர் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

******

**வெளியீடு: இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத்துறை, சென்னை–9**